**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 149** **நாள் : 28.06.2025**

**தலைமைச் செயலாளர் திரு.நா.முருகானந்தம், இ.ஆ.ப., அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டப்பணிகள், சாலை வெட்டு சீரமைப்புப் பணிகள், குளம் தூர்வாருதல் மற்றும் ஏரி புனரமைப்புப் பணி உள்ளிட்ட பல்வேறு பணிகளை இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

இன்று (28.06.2025) தலைமைச் செயலாளர் திரு.நா.முருகானந்தம், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாளச் சாக்கடைத் திட்டப்பணிகள், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் மேற்கொள்ளப்படும் சாலை வெட்டு சீரமைப்புப் பணிகள், புதிய சாலைகள் அமைத்தல், குளம் தூர்வாருதல், தாங்கல் ஏரி புனரமைப்புப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தலைமைச் செயலாளர் அவர்கள் சென்னைக் குடிநீர் வாரியத்தின் சார்பில் முகலிவாக்கம் பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் கீழ் ரூ.99.71 கோடி மதிப்பீட்டில் ஆலந்தூர் மண்டலத்தில் முகலிவாக்கம், வார்டு-156க்குட்பட்ட ராமச்சந்திரன் தெரு மற்றும் பங்களா தோப்பு பிரதான சாலையில் நடைபெற்று வரும் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளையும், பெருங்குடி மண்டலத்தில் ரூ.418.20 கோடி மதிப்பீட்டில், வார்டு-181, கொட்டிவாக்கம், வார்டு-183 பாலவாக்கம் பகுதிகளில் உள்ள ராஜா தெரு, எம்.ஜி.ஆர். சாலையில் நடைபெற்று வரும் பாதாளச் சாக்கடைத் திட்டப்பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்து, இப்பகுதிகளில் பணிகளை விரைந்து முடித்து, வீட்டு இணைப்புகளை உடனுக்குடன் வழங்கி சாலை வெட்டுக்களை சீரமைத்து சாலை அமைக்கும் பணிகளை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, தலைமைச் செயலாளர் அவர்கள், வார்டு-156க்குட்பட்ட முகலிவாக்கம் நியாய விலைக் கடையில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, அங்கு பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் பொருட்களின் இருப்பு மற்றும் வழங்கல் குறித்தும், பொருட்கள் வாங்குபவர்களின் கைவிரல் ரேகைப் பதிவு செய்து பொருட்கள் வழங்குவதையும் பார்வையிட்டு, மக்களிடம் கலந்துரையாடி ஆய்வு செய்தார்.

பின்னர், மழைக்கால முன்னேற்பாடு நடவடிக்கையாக, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், அடையாறு மண்டலம், வார்டு-177ல் உள்ள ஆறு கண் கால்வாயில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணி மற்றும் எம்.ஆர்.டி.எஸ் பகுதியில் உள்ள இரண்டு குளங்களில் ரூ.32.14 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் செடிகளை அகற்றி, தூர்வாரி, கரைகளை சீரமைக்கும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ச்சியாக, பெருங்குடி இரயில் நிலையம் சாலையில் வேளச்சேரி முதல் பெருங்குடி எம்.ஆர்.டி.எஸ் இரயில் நிலையம் மற்றும் எம்.ஜி.ஆர் சாலை வரையிலும் ரூ.8.09 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் தார்ச்சாலை அமைக்கும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், எம்.ஜி.ஆர். சாலையில் சென்னைக் குடிநீ வாரியத்தின் சார்பில் மேற்கொள்ளப்படும் பணிகள் முடிவுற்றவுடன் நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் சாலை வெட்டுக்களை சீரமைத்து சாலைகளை விரைந்து அமைத்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, பெரும்பாக்கம் ஊராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டடப்பட்டுள்ள குடியிருப்புகளுக்குச் சென்று, அங்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் தூய்மைப் பணிகள் குறித்தும், சென்னைக் குடிநீர் வாரியத்தின் சார்பில் வழங்கப்படும் குடிநீர் வழங்கல் பணிகள் குறித்தும், அடிப்படை வசதிகள் குறித்தும் பார்வையிட்டு மக்களிடம் கலந்துரையாடி ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ச்சியாக, சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு-199க்குட்பட்ட பொன்னியம்மன் கோயில் தெருவிற்கு எதிர்புறம் உள்ள ஓ.எம்.ஆர். சாலையில் தனியார் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் எரிவாயு குழாய் பதிக்கும் பணிகளைப் பார்வையிட்டு, இப்பணிகளை விரைந்து முடித்திடவும், சேதமடைந்த சாலைகளை உடனடியாக சீர்செய்து சாலை அமைத்திடவும் அறிவுறுத்தினார்.

பின்னர், சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட தாங்கல் ஏரியில் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து இன்போசிஸ் நிறுவனத்தின் ரூ.5 கோடி சமூகப் பங்களிப்பு நிதியிலும், சிறுதுளி தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் பங்களிப்புடனும் ஏரியினை புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

24.30 ஏக்கர் பரப்பளவில் 158 மில்லியன் லிட்டர் கொள்ளளவு நீர்த்தேக்கம் கொண்ட இந்த தாங்கல் ஏரியானது தற்போது 26.51 ஏக்கர் பரப்பளவில் 300 மில்லியன் லிட்டர் கொள்ளளவு நீர்த்தேக்கம் கொண்ட ஏரியாக புனரமைக்கப்பட்டு வருகிறது. இதில் 1,39,518 கனமீட்டர் வண்டல்கள் தூர்வாரப்பட்டுள்ளது. மேலும், சராசரியாக 2 மீ. ஆழம் கொண்ட இந்த ஏரியினை 3.5 மீ. வரை ஆழப்படுத்தும் பணி, மணல் அரிப்பு மற்றும் வெள்ளத்தைத் தடுக்கும் வகையில் ஏரியின் கரைகளைப் பலப்படுத்துதல், பறவைகளுக்கான தீவுகளை உருவாக்குதல், கரைகளை உறுதிப்படுத்தி, பறவைகள் மற்றும் பிற வனவிலங்குகளுக்கான வாழ்விடங்களை உருவாக்கிட ஏதுவாக 50 வகையான நாட்டு மரங்கள் 1500 எண்ணிக்கையில் நடவு செய்தல், 1.5 கி.மீ. சுற்றளவில் நடைபாதை, இருக்கைகள், சோலார் விளக்கு அமைத்தல், ஏரியில் குப்பை கொட்டுவதைத் தவிர்க்கும் வகையில் ஏரியைச் சுற்றிலும் வேலி அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.4.31 கோடி மதிப்பீட்டில் சாலைப் பகுதியிலும், தெற்குப் பகுதியிலும் சுற்றுச்சுவர் அமைத்தல், நுழைவாயில், நடைபாதை, வாகனங்கள் நிறுத்துமிடம், சிலைகள் அமைத்தல், வெளிப்புற நடைபாதை, நடைபாதை ஓரங்களில் தடுப்பு கைப்பிடிகள் அமைத்தல், பசுமைப் பரப்பினை உருவாக்குதல், நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல், தண்ணீர் வசதி, மின்விளக்கு வசதிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த ஆய்வுகளின்போது, மாநகராட்சி ஆணையர் திரு.ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை செயலாளர் திரு.ஆர்.செல்வராஜ், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி. ஜி. வினய், இ.ஆ.ப., தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு.டி.பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி. சிங், இ.ஆ.ப., செயல் இயக்குநர் திரு.கௌரவ் குமார், இ.ஆ.ப., தெற்கு வட்டார துணை ஆணையர் திரு. அஃதாப் ரசூல், இ.ஆ.ப. மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**